முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருஞானசம்பந்த நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.12.2018, செவ்வாய்க்கிழமை

1. **யோக சித்தே அரங்கா வாழ்க**
**யோக ஞானமுடன் தானதருமம்**
**அகிலம் எங்கும் வளர்த்து நன்கு**
**அற்புதம் நிகழ்த்தும் ஞானதேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தேசிகனுக்கு ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி சிலை திங்கள்**
**அறிவிக்க சூல திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 3ம் நாள் 18.12.2018, செவ்வாய்க்கிழமை)**
3. வாரமதில் திருஞானசம்பந்த நாயனாரும்
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
வாராந்திர சித்தர் பூசைதனை
வல்லமைபட உலகோர் செய்துவர
4. வருகவே ஞானிகள் வெளிப்பாடு
வருகையும் பெருகி நின்று
முருகன் ஞானத் தலைவனின்
முழுமை ஞான ஆட்சிக்காலம்
5. காலம் சடுதி உருவாக நேரும்
கந்தவேலன் சக்தியாக வரும்
காலம் வென்ற அரங்க ஞானி
கண்ணியமிக்க வழிகள் தன்னை
6. தன்னிலே உலகம் ஏற்றுவர
தவதரும வழிகளை தொடர
அண்ணல் சக்தி கூட உலகோர்
அவசியம் முழுமதி காலம் தோறும்
7. தோறும் பிரணவக்குடிலை அணுகி
தேசிகனாரிடம் தீட்சை ஆசி பெற
மாறுதலும் ஆறுதலுமான பலமும்
அரங்கன் அருள்பலமும் பெருகி
8. பெருகியே வரும் மக்களுக்கு
பேரிடர் காலமும் துன்பமிலா
ஆறுமுகனார் துணை பாதுகாப்பு
ஆயுள் கூடி சிறந்திடுவர்
9. சிறந்தநல் அரங்கன் சபை
சித்தர்கள் சூழ்ந்த ஞானசபை
பரந்தநல் தருமம் நிறைந்த
பரோபகாரமிக்க வள்ளல் சபை

10. சபைதனை ஆறுமுகனார் தானும்
சரவண சோதியாக ஆட்சி புரிய
அபயமென வரும் மக்களெல்லாம்
அனைத்து வளமும் கூடி சிறப்பர்

11. சிறப்பு தரும் அரங்கா முருகா
செயமருளும் ஞானதேசிகா
வரம் தந்து உன் பலம் பெறுபவர்
வாழும் காலமே உன் வழி ஞானியாவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருஞானசம்பந்தர் நாயனார் அருளிய சூட்சும நூலின் சாரம் :**

அளவற்ற யோகங்கள் செய்து வெற்றி கண்டிட்ட யோகசித்தே அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. உலகமெங்கும் யோகஞானத்துடன் தானதருமத்தினையும் வளர்த்து அற்புதங்களை நிகழ்த்துகின்ற மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 3ம் நாள் 18.12.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருஞானசம்பந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருஞானசம்பந்தர்.

வாரந்தோறும் நடக்கின்ற சித்தர் பூசைகளை உலக மக்களெல்லாம் உறுதியுடன் செய்து வர வேண்டும். அவ்விதமே செய்து வரவர, உலகினில் ஞானிகள் வெளிப்படுவது விரைந்து அதிகமாகி ஞானத்தலைவன் ஞானிகளின் தலைவன் வெளிப்பாடும் உறுதியாகி முழுமையான ஞானஆட்சி காலம் விரைந்து உருவாகிடும்.

முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதரித்த காலத்தை வென்றிட்ட ஆறுமுக அரங்க ஞானியரின் கண்ணியம்மிக்க ஞானவழிகள் தன்னை தர்மத்தின் வழிகள் தன்னை உலக மக்களெல்லாம் ஏற்று கடைப்பிடித்து தவதரும வழிகளையும் தொடர்ந்திட வேண்டும்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கனின் ஏழாம் படை வீடு ஓங்காரக்குடிலில் பௌர்ணமிதோறும் நடக்கின்ற சிறப்பு ஞானியர் வழிபாடுகளில் கலந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடம் தீட்சை உபதேசம் பெற்று மக்கள் சக்தி அடைந்திட, ஆசி பெற்றிட்ட அவரவருக்கும் அருள்பலம் பெருகிடும். ஆறுமுக அரங்கனின் அருள் பலமும் பெருகி நின்று அரங்கனை நாடி வருகின்ற மக்களுக்கு இயற்கை பேரிடர் காலத்திலும் துன்பம் ஏதும் இல்லாத வகையில் முருகப்பெருமானின் அருள் பாதுகாப்பும் ஆயுள் பெருக்கமும் உண்டாகி சிறப்பான வாழ்வினை வாழ்ந்திடுவார்கள்.

உலகினில் மிகச்சிறந்த ஞானசபையான அரங்கனின் ஏழாம் படை வீடு அரங்கனின் ஞானசபையாகும். அது நவகோடி சித்தர்களும் சூழ்ந்திட்ட சிறப்பான ஞானிகள் சபையாகும். எல்லையில்லாது விரிந்து பரந்த தருமம் நிறைந்த ஜீவதயவுமிக்க வள்ளல் சபையாகும். உயர்வான ஞானசபைதனை முருகப்பெருமானும் சரவணஜோதியாக நின்று நல்லாட்சி புரிகின்றார். அத்தகைய ஆற்றலும், புகழும், வல்லமையும், ஞானமும் மிக்க முருகப்பெருமானின் சரவணஜோதி சபையை அபயம் என நாடி வருகின்ற மக்களெல்லாம் எல்லா வளமும் நலமும் கிடைக்கப் பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள்.

சர்வ சிறப்புகளையும் தந்தருளும் அரங்கனே முருகனே சகல வெற்றிகளையும் தந்தருளும் ஞானதேசிகனே உமது வரத்தினை பெற்று உமது அருள் பலம் பெறுகின்ற மக்களெல்லாம் வாழும் காலத்திலேயே உமது வழியினில் பின் தொடர்ந்து ஞானிகளாக ஆகிடுவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருஞானசம்பந்தர்.

–சுபம்–